இந்து
The Hindu
2018 - 02

# யாழ் இந்துவில் சதுரங்கம்

யாழ் இந்துவின் சதுரங்க விளையாட்டின் அறிமுகம் 1975இல் கல்லூரியின் சதுரங்கக் கழகம் தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து நிகழ்ந்தது. இதற்கு உறுதுணையாய் நின்றவர் கல்லூரியின் பழைய மாணவரான திரு. வி. கணேசலிங்கம் அவர்கள். எவ்வித கொடுப்பனவுகளுனமின்றி இலவசமாகவே மாணவருக்கு பயிற்சி வழங்கி பழைய மாணவர்கள், பாடசாலை மாணவர்களுக்கு இலவச வழிகாட்டலை வழங்கும் பாரம்பரியத்தை ஆரம்பித்து வைத்தார். இலங்கையின் முதல்தர வீரர்களில் பலரை உருவாக்கிய பெருமை திரு. கணேசலிங்கம் அவர்களையே சாரும். தேசிய அணி தெரிவுக்கு ஒவ்வொரு வருடமும் ஓரிரு மாணவர்களேனும் தெரிவு செய்யப்படுவது வழக்கமாகியதுடன் இலங்கையின் தலை சிறந்த பாடசாலை சதுரங்க அணிகளில் ஒன்றாகவும், சில சந்தர்ப்பங்களில் தரப்படுத்தலில் முதல்நிலை அணியாகவும் யாழ்/ இந்து கல்லூரி திகழ்ந்தது.

1976இல் திரு. வி. கணேசலிங்கமும் தேகவியோகமாகிவிட்டார். 1977இல் திரு. இ. பரதனும், 1978இல் திரு. க. சங்கரும் (தற்போது நோர்வேயில் வைத்தியராக உள்ளார்) 1979இல் சு. சுதர்சனும் (தற்போது அமெரிக்காவில் பொறியியலாளராக உள்ளார்) 1980இல் மீண்டும் திரு. இ. பரதனும் 1981இல் மீண்டும் திரு. க. சங்கரும் 1982இல் இ.பார்த்திபனும் (தியாகி திலீபன்), நூற்றாண்டு மாணவன். இவர் இளைய மாணவர்களை சதுரங்கத்தில் வல்லுனர்களாக்குவதற்கு பயிற்சி அளித்து வழிகாட்டி அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். மேலும் 1983இல் திரு. த. அருணகிரிநாதனும் தேசிய நிலை போட்டிக்கு தெரிவாகினர். அதனைத் தொடர்ந்து 1983இல் நாட்டு நிலைமை மோசமடைந்ததை தொடர்ந்து சதுரங்க செயற்பாடுகள் வீழ்ச்சி கண்டன.

நாட்டு சூழ்நிலை காரணமாக போக்குவரத்து பிரச்சினைகளால் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமையும், 1987இன் பின் பல வருடங்கள் இலங்கை சதுரங்க சம்மேளனம் செயலிழந்திருந்தமையும் இதற்கான காரணங்களாகும். ஆயினும் 1996இன் பின்னர் சதுரங்கம் மீண்டும் புத்துயிர் பெற்றது. சதுரங்க தரப்படுத்தற் பட்டியலில் (ELO Rating List) 2000 புள்ளிகளின் மேற்பெற்ற இருவரும் யாழ் இந்துவின் பழைய மாணவர்களே இவர்களில் திரு குமணா (2245) தற்சமயம் கனடாவில் பொறியியலாளராக உள்ளார். திரு சி. யோதயன் (2108) நிதி நிறுவனமொன்றின் முகாமையாளராகவுள்ளார்.

1975இல் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதற்கொண்டே யாழ்ப்பாணத்தின் முதல் நிலை சதுரங்க அணியாக திகழ்ந்த கல்லூரி அணி 25 வருடங்களின் பின்னர் அந்நிலையிலிருந்து வழுவியது. ஆயினும் 2018இல் 13, 15 வயதுப் பிரிவுகள் யாழ் மாவட்ட போட்டிகளில் முதலிடம் பெற்றமை 2017இல் கண்டி சில்லெஸ்ரர் கல்லாரியில் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட குழுநிலை போட்டிகளில் பழைய மாணவன் திரு. த. அருணகிரநாதனால் பயிற்றுவிக்கப்பட்ட 13 மற்றும் 15 வயது அணிகள் இரண்டாம் இடத்ததை பெற்றமையும் பழைய நிலை மீண்டும் திருப்புவதற்கு காட்டியம் கூறுவதாய் அமைந்துள்ளது.

யாழ் இந்துக்கல்லூரி சதுரங்கக் கழகத்தின் ஆரம்ப கர்த்தாவாக திகழ்ந்த திரு. கணேசலிங்கம், நூற்றாண்டு மாணவன் இ. பார்த்திபன் ஆகியோரின் அணுகுமுறையினை பின்பற்றி கல்லூரியில் பெரும் எண்ணிக்கையானோர் சதுரங்கத்தில் பங்குபற்றுவதை ஊக்குவிப்பதுடன் சுயகற்றலுக்கான நிலையமும் உருவாக்கப்படுவது சதுரங்கம் மென் மேலும் வளர்ச்சியடைய உந்து சக்தியாக அமைவதுடன் மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், தலைமைத்'துவப் பண்பு போன்றவற்றினை மேன்மேலும் மேம்படுத்தவும் அனுசரணையாக அமையும். இதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை யா/ இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டு வருவதனால் வரும் 2019ம் ஆண்டில் கல்லூரி சதுரங்க அணிகள் மேலும் மெருகு பெறும் என எதிர்பார்பக்கலாம்.

சு. தனேஸ்குமார்
1991 உயர்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.jhcobajaffna.com secretary@jhcobajaffna.com 021 221 1665

## கல்லூரி மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சி



தற்காலத்தில் பல கல்லூரி மாணவர்களின் நீர்நிலைகளில் தொடர்பான விபத்துக்கள் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தம்மை தற்பாதுகாத்துக் கொள்ள அவசியமானநீச்சல் பயிற்சியினை எமது கல்லூரி மாணவர்களும் பெற்றுக் கொள்ளும் வகையில் எமது சங்கத்தினால் நீச்சல் பயிற்சி வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பல மாணவர்கள் ஆர்வத்துடன் இந்த பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்கின்றனர். வினைத்திறனான தொடர் பயிற்சிகளை நிகழ்த்தும் பொருட்டு கல்லூரியில் நீச்சல் கழகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.



## சிவஞான வைரவப்பெருமானின் வருடாந்த சங்காபிஷேகம் 2018









எமது கல்லூரியில் வீற்றிருக்கும் சிவஞான வைரவப்பெருமானின் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் 2ஆம் திகதி ஜூன் மாதம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. காலை 7 மணிக்கு பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜா குருக்களின் தலைமையில் கிரிகைகள் ஆரம்பமாகின. அதனை தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றது. ஆசிரியர்கள் , பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பெற்றோர், நலன்விரும்பிகள், மாணவர்கள் பங்கேற்புடன் வைரவ பெருமானின் வீதியுலா 11 மணிக்கு இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர்களிடையேயான துடுப்பாட்ட போட்டி
## *Championship Cricket 2018*




எமது சங்கத்தினால் பழைய மாணவர்களையும் பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களையும் ஒருங்கிணைக்கும் முகமாக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட “Championship Cricket “ போட்டி மிகவும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் ஆடி மாதம் 28 ம் திகதி நடைபெற்றது. இதில் பழைய மாணவர்கள், பாடசாலை உயர்தர மாணவர்கள் என 19 அணிகள் பங்குபற்றி போட்டிகளை சிறப்பித்தன. இவ் மென் பந்து துடுப்பாட்ட போட்டியானது ஆறு வீரர்கள் ஐந்து பந்து பரிமாற்றங்கள் என மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாக நடைபெற்றது. கிண்ணத்தை வெற்றி கொள்ளும் அணிக்கு ரூபா 15,000 , 2ம் இடத்தை பெற்ற அணிக்கு ரூபா 5,000 மற்றும் ஐந்து சிறந்த பெறுபேறுகளுக்காக ரூபா 1,500 வீதம் ரூபா 7,500 ம் பணமாக வழங்கப்பட்டன.

இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக எமது பாடசாலையின் முன்னாள் உப அதிபர் திரு பொ.மகேஸ்வரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்களான திரு கு.குணசிங்கம் , திரு வா.சிவராஜா ஆகியோர் பங்குபற்றி இப் போட்டிகளை மேலும் சிறப்பித்தனர். இறுதிபோட்டியானது போதிய வெளிச்சமின்மை காரணமாக பங்குபற்றிய இரு அணிகளுக்கும் வெற்றிகிண்ணமும் பரிசு தொகையும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சியாக சாதனை படைத்துவரும்
# நம்மூர் கலைஞர்களின் "இந்துவின் முத்தமிழ் மாலை"

யாழ்ப்பாணத்தில் பல புதிய முயற்சிகளுக்கு முன்னுதாரணமாக திகழும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மீண்டும் ஒரு சாதனை நிகழ்வை 2015 இல் ஆரம்பித்து நிகழ்த்திவருகிறது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125 வது ஆண்டினை முன்னிட்டு யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கம் முற்று முழுதாக உள்ளூர் கலைஞர்களினை கொண்டு பிரமாண்டமாக நடாத்திய கட்டணத்துடன் கூடிய முத்தமிழ் மாலை-2015 நிகழ்வு பார்வையாளரினை பெரிதும் கவர்ந்ததுடன் அவர்கள் கலைஞர்களையும் பாராட்டிச்சென்றனர். அதனை தொடர்ந்து தொடர்ச்சியாக வருடம் தோறும் நம்மூர் கலைஞர்களை கொண்டு சிறப்பாக நடாத்தப்பட்டு வருகிறது.



தொடர்ச்சியாக நான்காவது வருடமாக இந்தவருடமும் 14.07.2018 சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இரவு 9.30 மணிவரை கல்லூரியின் சபாலிங்கம் கலையரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில்

- இணுவையூர் கோபிதாசிஸ் குழுவினரின் விரலோசை
- உரும்பிராய் கலைக்கோவிலின் நிருத்தியாஞ்சலி
- கிளிநொச்சி கலாலயா குழுவினரின் நாடக ஆற்றுகை
- பூவன் மீடியாவின் பல் சுவை கதம்பம்

ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

மிகவும் நேர்த்தியான முறையில் வெளிநாட்டுக்கலைஞர்களின் தரத்திலும் அதிகமான தரத்தில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றதை தாம் உணர்ந்ததாக பார்வையாளர் கூறிச்சென்றனர். பூவன் மீடியாவின் பல்சுவைக்கதம்பம் முதல் நிகழ்வாக இடம்டிபற்றது. பாடல் மிமிக்கிறி, நகைச்சுவை என பல்சுவைமிக்கதாக இந்த நிகழ்வு இருந்தது. எமது பழையமாணவரரன மதீசனின் நெறியாழ்கையில் சிறப்புற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



ஒருமணி நேரம் கோபிதாஸ் குழுவினரின் வயலின் இசை மழையில் அனைவரும் நனைந்தனர். திறமையான இந்த நம்மூர் கலைஞரை கௌரவிக்கும் போது பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று கரவொலி கொடுத்து பாராட்டினர். கோபிதாஸ் அவர்களின் மாணவர்களும் மிக அருமையான இசை நிகழ்வினை வழங்கியிருந்தனர். உரும்பிராய் கலைக்கோவிலினால் சிறப்பான நடனம நிகழ்வு பார்வையாளர்களின் கண்ணிற்கு விருந்தாக வழங்கப்பட்டிருந்தது. சகல நடன கலைஞர்களும் மிக நேர்த்தியான திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களின் பாராட்டுதலைப் பெற்றனர். இவர்களின் திறமைகளை பார்க்கும் போது இந்திய தொலைக்காட்சிகளில் பாராட்டப்படுகளின்ற நடனங்களை விட பன்மடங்கு சிறந்ததாக தென்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிசேகரிப்பு நிகழ்வுகளை உள்ளூர் கலைஞர்களைக் கொண்டும் தற்போதைய காலத்தில் நடாத்தலாம் என்பதற்கு ஒரு முன்மாதிரியானதாக இந்நிகழ்வு தொடர்ச்சியாக இடம் பெற்றுவருவது மகிழ்ச்சிக்குரியது. இந்நிகழ்வில் சகல தரப்பு வயதினரும் கலந்து கொண்டிருந்தமை நிகழ்வுக்கு மேலும் அழகு சேர்த்திருந்தது. நிகழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை அரங்கு நிறைந்த கரகோசமும் இரவு 9.30 மணி வரை இருக்கைகளை விட்டகலாத பார்வையாளர்களும் நம் கலைஞர்களின் திறமையை பறைசாற்றி நின்றது.



கிளிநொச்சி கலாலயா குழுவினரின் நாடக ஆற்றுகையானது தற்கால நாட்டு நடப்பு நிகழ்வுகளை நகைச்சுவை கலந்ததாக வழங்கியிருந்தனர். உண்மையான கலா ரசிகர்கள் கண்களில் கண்ணீர் மல்க நடிப்பினை கண்டுகளித்தனர். முத்தமிழ் மாலையாக இயல், இசை, நடாகம் எனும் முத்தமிழ் மிக நேர்த்தியான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நம்மூர் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை புறக்கணித்து வெளியூர் கலைஞர்களின் நிகழ்வுக்காக முந்தியடிக்கும் எம்மவர்களுக்கு இந்த நிகழ்வு சிறப்பான முன்னுதாரணமாகும். திறமையான எத்தனையோ கலைஞர்கள் சரியான வாய்ப்புக்களும் மேடைகளும் வழங்கப்படாமல் வேறு தொழிலை வாழ்வாதாரமாக செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டள்ளனர். இந்த நிகழ்வின் மூலம் யாழ் மக்களின் மனநிலை மாறி இவ்வாறான கலைஞர்கள் கௌவரவிக்கப்பட இது ஒரு வழியகாட்டியாக அமையட்டும்.




## கல்விக்கான ஓட்டம் 2018



எமது கல்லூரியின் 92ஆம் ஆண்டு உயர்தர பிரிவினால் வருடாவருடம் நடாத்தப்படும் கல்விக்கான ஓட்டம் என்ற நிகழ்வினை யாழ் மாவட்டத்திலும் பிரபலப்படுத்தும் நோக்கோடு எமது சங்கத்தினால் இவ்வருடம் யூன் மாதம் 16ஆம் திகதி கல்லூரியில் ஆரம்பித்து யாழ் நகர பகுதியை மையப்படுத்தி ஒரு நடை பவனி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் சமய பெரியார்களும் எமது பழைய மாணவர்களும் யாழ் மாவட்ட பல நிர்வாக துறைகளை சார்ந்தோர்களும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவராயன்கட்டில் ஒரு சமூகப்பனங்காடு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பல்வேறு தொழில் சார் புலமையாளர்களையும், கலைஞர்களையும், சாதனையாளர்களையும் உருவாக்கி வருகின்றதை போலவே சமுகப் பொறுப்புள்ள தலைவர்களையும் உருவாக்கியே வந்துள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் 1991ம் அணியினால் 2018 ஒக்ரோபர் மாதம் கிளிநொச்சி மாவட்டம், பல்லவராயன்கட்டில் பனை விதைகள் நடப்பட்டதை ஒரு சிறந்த சமூக செயற்பாட்டுற்கு உதாரணமாக கொள்ளலாம்.

பனை தமிழனின் அடையாளம். உலகில் பனை அதிகம் உள்ள நாடுகளில் இந்தியாவிற்க்கு அடுத்த படியாக இலங்கையுள்ளது. இலங்கையிலும் வடக்கு மாகாணத்திலேயே அதிகம் உள்ளது. கடந்த 40 வருட கணக்கெடுப்பை பார்த்தால் பனைகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துவிட்டன. யுத்தத்தின் காரணமாகவும் யுத்தம் முடிந்த பின்னர் விவசாயம் மற்றும் உட்கட்டமைபபு அபிவிருத்தி காரணமாகவும் பெருமளவு பனைகள் அழிந்தன் தொடர்ந்தும் வேரோடு பிடுங்கப்படுகின்றன.

பனையின் பயன்கள் ஏராளம். பனம் உற்பத்திகளை முறையாகச் சந்தைப்படுத்தினால் எத்தனையோ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை பெற்றுக் கொடுக்கமுடியும்.உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிற்கும ஏற்றுமதி செய்ய முடியும். எனவே தான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின்1991ம் அணி பனை விதைப்பதில் ஆர்வம் காட்டினர்.

இது தொடர்பாக விவசாய வல்லுனர்கள் , சூழலியாளர்கள், பொதுமக்கள் என பலருடனும் கலந்துரையாடி ஒரு சமூகக்காட்டை உருவாக்க திட்டமிட்டனர். வீதியின் இருமருங்கிலும் பனம் விதைகளை நேர்த்தியாக நடுவதன் மூலம் அழகான தோற்றமுடைய பனைகளைப் பெறலாம்.ஆனால் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் திட்டமிட்ட முறையில் பனை விதைகளை நடுவதன் மூலம் உருவாக்கப்படும் பனங்காடு பல விசேட நன்மைகளை பெற்றுத் தரும்.

முளைக்கின்ற பனம் விதைகளைப் பராமரித்தல்,மீள்நடுகை, மண்ணரிப்பைத் தடுத்தல், மண்ணிண் வளத்தை மேம்படுத்தல், நிலத்தடி நீரை பாதுகாத்தல் என நன்மைகளின் பட்டியல் நீளமானது. சமூக காடானது மக்கள் குடியிருந்து கைவிடப்பட்ட பகுதிகளிலோ, முன்பு காடாயிருந்து அழிக்கப்பட்ட பகுதியிலோ உருவாக்கப்படலாம் அல்லது ஒரு காட்டினை உருவாக்கக் கூடிய புவியியல் தன்மைகளை கொண்ட நிலப்பரப்பிலோ உருவாக்கப்படலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசம் பனை வளம் நிறைந்த பகுதியாக இருந்தது. இன்று பெருமளவு பனைகள் குறைவடைந்து காணப்படுவதாலும் அதிக நிலப்பரப்பு மனித பாவனை குறைந்த பகுதியாக இருப்பதனாலும் சமூகக் காடாக்கலுக்கு பொருத்தமான பகுதியாகத் தெரிவு செய்யப்பட்டது. பிரதேச மக்களின் முதல் தெரிவு இரணைதீவாக இருந்த போதிலும் அதற்கான அனுமதி கிடைக்கவில்லை, என்பது வருத்தத்திற்குரியது.

பூநகரி பிரதேச செயலகம், பூநகரி பிரதேச சபை,கிளிநொச்சி மாவட்ட உளநல அணி,விவசாயிகள் என பலதரப்பட்டவர்களின் கருத்தொருமித்த இடமாக பல்லவராயன்கட்டு தெரிவு செய்யப்பட்டது. பனை விதைகள் பூநகரி பிரதேசத்தில் வாழ்கின்ற உளநல சேவை நாடிகளின் குடும்பங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன.இதற்காக ஒரு பனம் விதைக்கு ரூபா 2 வீதம் வழங்கப்பட்டது.இரண்டு கட்டமாக பனை விதைகள் நட்ப்பட்டன. 2018 ஒக்ரோபர் மாதம் 20 மற்றும் 27ம் திகதிகளில் இந்த நற்காரியம் பிரதேச மக்கள் ,யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள், கிளிநொச்சி மாவட்ட உளநல அணியினர், பிரதேச சபை உறுப்பினர்கள் முதலியோரின் களப்பங்களிப்புடன் இனிதே நிறைவேறியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர் கண்காணிப்பினூடாக பனைவிதைகள் முளைப்பதை உறுதி செய்யப்படும். மாடுகளின் தாக்கத்தை குறைக்க பிரதேச மக்களின் ஒத்துழைப்போடு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பனைவிதைகள் முளைக்காத இடங்களையும், முளைத்து அழிந்து போன இடங்களையும் இனங்கண்டு 2019 ஒக்ரோபர் மாதம் மீள்நடுகை நடைபெறும். அக்குறைந்தது 5 வருடங்களாவது தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படும்.

பனைவிதை நடுகைக்காக சேகரிக்கப்பட்ட 50,000 விதைகளில் விதைத்தவை போக எஞ்சிய ஏறத்தாழ 30,000 விதைகள் உளநல சேவைநாடிகளின் குடும்பங்களுக்கு பனம்பாத்தி தயாரிக்க இலவசமாக வழங்கப்பட்டன.பனைகள் வளர்ந்து பூப்பதற்கு ஏறத்தாழ 15 வருடங்கள் எடுக்கும்.

அதன்பின் பதநீரும் ,பனம்பழங்களும் பெற்றுக்கொள்வதில்குறைவிருக்காது. எனினும் பனையோலை,விறகு போன்றவை வடலியாக இருக்கின்ற போதும் முதிர்பனையாக இருக்கின்ற போதும் கிடைக்கக்கூடியவை . முதிர்பனை ஒன்று இன்றைய திகதிக்கு ரூபா 5000 ஆகவுள்ளது. ஒரு சிறிய பணத்தை முதலிடுவதன் மூலம் அதிக வருமானத்தை பெறக்கூடிய இடமாக பனை நடுகை காணப்படுகிறது.



இந்த பனைவிதை நடுகை தொடர்பான படங்கள் சமூகவலைத்தளங்களில் வந்த போது கிடைத்த பாராட்டுக்களைப் பார்க்கின்ற போது இது ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூகநலத் திட்டமாகவே கருதப்படலாம். யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் 1991ம் அணி மட்டுமன்றி எல்லா அணி மாணவர்களினதும் ஏன் பிற பாடசாலை பழைய மாணவர்களின் கருத்துக்களையும் கருத்தில் கொள்ளுமிடத்து இதே செயற்பாடு அடுத்த வருடங்களினும் செயற்பட வேண்டியதே என்ற எண்ணமே மேலோங்கி நிற்கின்றது.

வே.ஜெகரூபன்
உளநல மருததுவ அதிகாரி
மாவட்ட பொது வைத்தியசாலை
கிளிநொச்சி
(பழைய மாணவன்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
1991ம் அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர்கள் சங்கம் ஐக்கிய இராச்சியம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)
திரு. R. வாசவன் (பொருளாளர்), திரு. P. S இளங்கோ (உப தலைவர்), திரு. S. நவகரன் (செயலாளர்), திரு. S ஜெயபிரகாஸ் (தலைவர்), திரு. T. பிரபாகரன், திரு. S. கிருபாகரன்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)
திரு. S சஞ்ஜீவ், திரு. R. ரமேஸ்குமார், திரு P K பாலன், திரு. N. ராகவன், திரு R. சசிகரன், திரு. K. மயூரன், Absent – குகப்பிரியன்

## மனிதா நீ மாறிடு

ஓலங்கள் போட்டிடும் காகம்
ஓட்டினில் போய் விழும் சாதம்
ஆலம்பம் மேவிட கரையும்
அடுத்தாத்து காகமும் விரையும்
சாலம்பம் மேவிட கூடும்
சாப்பிட்டு முடிந்ததும் ஓடும்
பாலமாய் இருந்திடும் மனிதா
பார்த்திடு இச்செயல் இனிதா

ஒற்றுமை தானே உலகில்
ஒப்பற்ற சொத்தென்றாய்
மற்றவை எல்லாம் ஒழுங்கில்
மனித நேயத்தில் பின் என்றாய்
உற்றார்க்கு மறைப்பதும்
ஊர் நின்று பிரிவதும்
தற்பெருமை கொண்டு நீ
தம்மவரை பலியிடலும்

உற்றதொரு செயல் தானோ – மனிதா
உனக்கும் இது சரிதானோ
பெற்ற தாய் மற்றத்தாய்
பேரமுதம் தந்த தாய்
உற்றார் உறவினர் உன் சமூகம்
உயர்வுறச் செய்வதே
கற்றவுன் கடனல்லோ
காலத்தும் இது நியமல்லோ

இனியாவது விழித்திடு
இன்முகம் காட்டிடு
தனிமையை விடுத்து நீ
தன் சொந்தம் சேர்த்திடு
கனிவான பேச்சாலும்
கருணையான செயலாலும்
மனிதா நீ மாறிடு
மனிதத்தை தேடிடு

Dr. அ. ஜெயகுமரன்
1992 உயர்தரம்

Print@ JR, 021 222 4484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும் எம் அன்னை நின் நலம் மறவோம்.